ஸ்ரீ தந்வந்தரயே நம:

# வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்திரிகை.

சௌமிய
ஆனி

JULY
1970



தொகுதி 32
பகுதி 7

Vol. 32
No. 7

ஆசிரியர்:
வைத்ய வாசஸ்பதி பண்டிட் P. S. ராம சர்மா,

பிரசுரகர்த்தா:
வைத்ய T. S. ஈச்வரன், L. I. M.


| | | |
|---|---|---|
| நம்பிக்கை தரும் பேச்சுக்கள் | ... | 139 |
| மாவட்ட தலைநகரில் இந்திய மருத்துவ மனைகள் | ... | 141 |
| ஸஹஸ்ரயோகம் | ... | 142 |


வருஷச் சந்தா
ரூ. 5/-

Annual
Subscription
Rs. 5/-

காரியாலயம்: 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

# வைத்யரத்னம் P. S. வாரியருடைய

# ஆர்ய வைத்தியசாலா

## கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

Registered Trade Mark.

தலைமை ஆபீஸ் போன் : கோட்டக்கல் எக்ஸ்சேஞ்ஜ்
ஆபீஸ் - மேனேஜிங் டிரஸ்டி - மானேஜர் தொடர்புடன் போன் நெ 31

| | |
|---|---|
| நர்ஸிங்ஹோம் | போன் நெ. 44 |
| தலைமை வைத்யர் | போன் நெ 25 |
| மானேஜிங் டிரஸ்டி | (வீடு) போன் நெ 27 |
| மானேஜர் | (வீடு) போன் நெ. 26 |

சென்னை கிளை :

No. 1, கிருஷ்ணமாசாரி ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை 34. போன் எண் 811275

மற்ற கிளைகள் :

1. கோழிக்கோடு (போன் 2155)
2. பாலக்காடு (போன் 104)
3. பாலக்காடு ஸேல்ஸ் டிபோ (போன் 584)
4. ஆல்வாய்
5. ஈரோடு (போன் 172)
6. திரூர் (போன் 31)
7. எர்ணகுளம் (போன் 33026)
8. திருவனந்தபுரம் (போன் 3924)

மேலும் நூற்றுக்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற
ஏஜண்டுகளும், டெபோக்களும்

சுத்தமானதும், உயாதரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைதய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும். எமது தலைமை வைதயரால் கடிதமூலமாக வைதய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக்கிழி, பிழிச்சல முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் **கோல்டன் ஜூபிலி நர்ஸிங்ஹோமில்** நடத்தப்பெறும்.

மற்ற விபரங்களுக்கு :—

**மானேஜிங் டிரஸ்டி.**
ஆர்ய வைத்யசாலை, கோட்டக்கல்.

# திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் பிரைவேட் லிமிடெட்.,

[ஸ்தாபிதம் 1939.]


ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் :
28, A. தென்னூர் ரோடு,
திருச்சிராப்பள்ளி-1.
Phone No. 3660

விற்பனை டிப்போ :
31, சின்னக் கடைத்தெரு
திருச்சிராப்பள்ளி-2
Phone No. 4202


வைத்தியர்களுக்குத் தேவையான எல்லா சிறந்த ஆயுர்வேத மருந்துகளும் சாஸ்திரீய ரீதியில் தகுந்த நிபுணர்கள மேற்பார்வையில் தயாரிக்கப் பெறுகின்றன.

வைத்தியர்களுக்கென விசேஷச் சலுகையுடன் குறைந்த விலையில் மொத்தமாகவும், சில்லரையாகவும் மருந்துகள் கிடைக்கும்.

## எமது விசேஷ புத்தக வெளியீடு-1.

எமது ஸ்தாபனத்தில் தயாராகும் மருந்துகளின் செய்முறையை விளக்கும்

## ஔஷத யோக ஸங்கிரஹம்

### முதல் பாகம்

பிரதி விலை ரூ. 6-00. தபால் செலவு தனி.

விசேஷ விபரங்களுக்கு நேரில் எழுதித் தெரிந்து கொள்ளவும்

T. S. ஈச்வரன், L.I.M. மானேஜிங்டைரக்டர்.

GRAM: KALIA

Phone: Off. 3232, Res. 4343

# KALIA BROTHERS (Regd.)

INDIAN DRUGS MERCHANTS

JULLUNDUR CITY. (INDIA)

| Price List | | Rs. ps. |
|---|---|---|
| Pure Musk per gram | | 50-00 |
| Pure Saffron | | 2-00 |
| Pure Gorochanam per gram | | 9-00 |
| Pure Pearls Spl. | ,, | 10-00 |
| ,, No. 2 | ,, | 7-00 |
| ,, No. 3 | ,, | 4-00 |
| Pure Ambar No. 1 | ,, | 3-50 |
| ,, No. 2 | ,, | 2-50 |
| ,, No. 3 | ,, | 2-00 |
| Pure Silver Leaves | ,, | 0-80 |

## PACHAKARPURAM

| | | |
|---|---|---|
| Spl. Bhimseni per gram | | 0-30 |
| Singapuri (Yellow) | ,, | 0-25 |
| German or Japan | ,, | 0-20 |
| Powder Pachakarpuram | | 0-06 |
| Pure Menthol | ,, | 0-45 |
| Pure Thymol | ,, | 0-20 |
| Ashtavargam | per Kilo | 7-50 |
| Jiwak Rishwak | ,, | 2-50 |
| Meda Mahameda | ,, | 8-00 |
| Kakoli Kshir Kakoli | ,, | 8-00 |
| Ridhi Vridhi | | 12-00 |
| Silajit (Kalmodam) | | |
| Suryatapi Silajit No. 1 | ,, | 100-00 |
| No. 2 | ,, | 85-00 |

## CRUDE DRUGS

| | | |
|---|---|---|
| Attis Bitter | ,, | 100-00 |
| Beedana | ,, | 20-00 |
| Guggulu Shudh | ,, | 12-00 |
| Gowela | ,, | 60-00 |

| Price List | | Rs. Ps. |
|---|---|---|
| Kuth No. 1 | per Kilo | 5-00 |
| Moosli White | ,, | 15-00 |
| Pushkar mool | ,, | 5-00 |
| Rose Flower Dry | ,, | 10-00 |
| Som Lata | ,, | 10-00 |
| Salib Panja | ,, | 85-00 |
| Salib Gatha | ,, | 20-00 |
| Shingraf | ,, | 300-00 |
| Tiger's Fat | ,, | 45-00 |
| Bears Fat | ,, | 40-00 |
| Pure Vanslochan | ,, | 80-00 |

## AYURVEDIC MEDICINE

| | | |
|---|---|---|
| Chander Prabha | per Kilo | 70-00 |
| Chavan prash | ,, | 10-00 |
| Gudoochi Sattoo (Sindi Maw) | ,, | 12-00 |
| Ras Sindur | ,, | 300-00 |
| Shudh parad | ,, | 300-00 |
| Swaran Vang | ,, | 200-00 |
| Yogaraj Guggulu | ,, | 30-00 |
| Kaishore ,, | ,, | 30-00 |
| Maha Yogaraj ,, | ,, | 140-00 |
| Abrak Bhasam | ,, | 200-00 |
| KantLoh Bhasam | ,, | 85-00 |
| Loh Bhasam Special | ,, | 150-00 |
| Shring Bhasam | ,, | 35-00 |
| Sankh Bhasam | ,, | 30-00 |
| Mandur Bhasam | ,, | 35-00 |
| Silajit Bhasam | ,, | 35-00 |
| Silver Bhasam | ,, | 700-00 |
| Swaran Makshik | ,, | 80-00 |
| Sulphur Purified | ,, | 50-00 |
| Tamber Bhasam | ,, | 300-00 |
| Sidh Makar Dhwaj | per gram | 4-20 |
| Makar Dhwaj ordinary | | 0-80 |

**Please ask for detailed Price List 6¼% Commission to the readers of Vaidya Chandrika**

தந்தி : " அம்ருதம் "　　P. B. No. 1382.　　போன் : 26006

# தி ஆர்ய வைத்திய பார்மஸி

## (கோயமுத்தூர்) லிமிடெட்.,

தலைமை ஆபீஸ்: 366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18

THE ARYA VAIDYA PHARMACY (COIMBATORE) LTD　AVP

**உண்மையான ஆயுர்வேத மருந்துகளுக்கும் சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்.**

எங்களுடைய கிளைகள் :

| | | |
|---|---|---|
| 1. | 23 B, பூஸா ரோடு, புது டில்லி : | போன் ; 585687 |
| 2. | மொயிதின் பள்ளி ரோடு, கள்ளிக்கோட்டை 1 | ,, 2984 |
| 3. | கௌடியா மடத்தெரு, மதராஸ்-14 | ,, 85752 |
| 4. | வளிஞ்ஞம்பலம், எர்ணாகுளம், கொச்சின்-18 | ,, 32988 |
| 5. | பிள்ளையார் கோயில்ரோடு, கண்ணனூர்-1 | ,, 92 |
| 6. | மார்க்கெட் ரோடு, பாலக்காடு-1 | ,, 195 |
| 7. | கடைவீதி, பொன்னானி | ,, 41 |
| 8. | ரௌண்ட் வெஸ்டு, திருச்சூர்-1 | ,, 378 |
| 9. | கோர்ட் ரோடு, ஆலத்தூர் | ,, 87 |
| 10 | மெயின் ரோடு, கஞ்சிக்கோடு | |
| 11. | ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில், கோயமுத்தூர்-18, | ,, 33758 |
| 12 | இந்திரா பில்டிங், கள்ளிக்கோட்டை-2 | ,, 4891 |
| 13. | 229, ராஜவீதி, கோயமுத்தூர்-1 | ,, 33988 |
| 14. | T. T. 384 K. டெலிச்சேரி ரோடு கண்ணனூர்-2 | |
| 15 | No. 263, 64 11 வார்டு, மெயின் ரோடு, எடப்பாள் (பொன்னானி) | |

பாக்டரி :
கஞ்சிக்கோடு (கேரளா)
(போன் : 2)

நர்ஸிங்ஹோம் :
திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.
(போன் : 22194)

மேலும் விபரங்களுக்கு விண்ணப்பம் செய்க :—

ஆர்ய வைத்தியன் P. V. ராமவாரியர்
பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.

# வாரியர்

# க்ஷீரபலா-101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவித மான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளையும் நிச்சயமாகக் குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருத்தலைவலி முதலிய கோளாறுகளையும் குணப் படுத்தும் :

ரத்த அழுத்தம் [பிளட் பிரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும் விருதாப்பியத்தினால் ஏற் படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலை 25 ML. ரூ. 7-00 ; 12 ML. ரூ.3-75

ஆரிய வைத்தியர் கே. எஸ். வாரியர் அவர்களின்

## அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனாபஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி-2.

PHONE : 5441 வீடு போன் : 6074

[1936-ல் நிறுவப்பட்டது.]

கஸ்தூரி, குங்குமப்பூ, மற்றும் இதர
உயர்ந்த மருந்து சரக்குகளுக்கு
நம்பிக்கையான இடம்

BHALLA BROTHERS (Regd.)

LUDHIANA (India)

IN THE SERVICE OF AYURVEDA SINCE 1934

SUPPLYING PURE ARTICLES.

ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுதவும்

உயர்ந்த கஸ்தூரி, குங்குமப்பூ,
பச்சைகர்ப்பூரம் முதலியவைகளுக்கு
மிகவும் சிறந்த இடம்.

Wholesale Dealers in:
Musk Saffron and Ayurvedic Drugs etc.

CORRESPOND IN HINDI OR ENGLISH

Shri Markanday Musk Depot

(Regd.)

Importers and Exporters

Civil Lines, LUDHIANA, PUNJAB.

கஸ்தூரி, கோரோசனை, பச்சகர்பூரம்,
குங்குமப்பூ முதலியவைகளுக்கு
நம்பிக்கையான இடம்

BHANOT BROTHERS
(REGD.)
Wholesale Musk, Saffron and Indian Drugs
Merchants,
LUDHIANA - PUNJAB
ஹிந்தி அல்லது ஆங்கிலத்தில் எழுதவும்

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

K. L. TALWAR & BROS.,
MUSK MERCHANTS,
P. B. No. 17, LUDHIANA.
விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.



# வைத்திய சந்திரிகா


தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

| | | |
|---|---|---|
| தொகுதி 32 | ஸௌமிய ஆனி | பகுதி 7 |
| Vol. 32 | 1970 ஜூலை | No. 7 |


நமச் சிவகுமாராய.

॥ श्री धन्वन्तरये नमः ॥

उदेतु हृदयाकाशे गुरुवर्यकलानिधिः ।

यदीयचन्द्रिका वैद्यसंशयध्वान्तनाशिनी ॥

## நம்பிக்கைதரும் பேச்சுக்கள்

சுயநலமற்ற நல்லெண்ணமும் உயர்ந்த நோக்கமும் செயலாற்றுவதில் திறமையும் தளராத முயற்சியும் தான் தேசத்தை ஆளுபவர்களின் குணமாக இருக்கவேண்டும். பல காலமாக நமது தேசத்தை ஆளுகின்றவர்கள் மேடைகளிலும் கூட்டங்களிலும் அந்தந்த சமயத்திற்குத் தகுந்தபடி பேசி விட்டு பிறகு அதை மறந்து விடுவர். தற்சமயம் தமிழ்நாட்டை ஆளும் கட்சியானது அவ்விதம் இல்லை எனக் கூறலாம். பேச்சுக்களை ஓரளவு செயலில் நிறைவேற்றி வருகின்றனர்.

இந்திய வைத்ய முறைகளில் நல்ல முன்னேற்றம் ஏற்பட வேண்டும் என்று நடந்த 29-வது L. I M. மகாநாட்டில் கனம் கல்வி அமைச்சர் ஆவல் தெரிவித்து உள்ளார் இந்திய வைத்யர்கள் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும்படியான முறையில் ஆராய்ச்சி செய்து மருந்துகளையும் தயார் செய்து நன்கு பணி

யாற்ற வேண்டும் என்று அவர் கூறியுள்ளார். கனம் அமைச்சர் அவர்களுக்கு உள்ள அனுதாபத்தை அவர் நன்கு விளக்கி யுள்ளார். மாவட்டத் தலைநகர்களில் இந்திய வைத்ய ஆஸ் பத்திரிகள் நிறுவப்படுவதாக அவர் கூறியுள்ளதை மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம். அதைத் தவிர இந்திய வைத்யத்தைத் தமிழ் நாட்டில் எல்லா இடங்களிலும் பரப்புவதற்கு அவர் கண்டு பிடித் துள்ள வழி மிகவும் போற்றத்தக்கது. அதாவது லட்சத்திற்கு மேல் வருமானமுள்ள கோவில்களை ஒட்டி அந்தந்தக் கோவில் களின் சிலவில் இந்திய வைத்ய நிலயமொன்று ஏற்படுத்த சர்க்கார் உத்தேசித்து இருப்பதாக கனம் மந்திரி அவர்கள் கூறி யுள்ளார்கள். அவ்விதம் ஏற்படுத்தினால் ராஜ்யத்தில் பல இடங் களில் இந்திய வைத்யசாலைகள் ஏற்படலாம். தேவாலயத்து நிதிகளும் பிணி அகற்றுவதில் சிலவு செய்யப்படுவது நல்ல நோக்கம் கொண்டதாகும். அதிக இடங்களில் இந்திய வைத்யர் களுக்கு உத்யோகம் கிடைக்க வழி வகுத்ததாகவும் ஆகும். மாவட்டத் தலைநகர்களில் இந்திய வைத்ய ஆஸ்பத்திரிகள் ஏற்படப்போவதை அறிந்து உத்யோகம் கிடைக்கக்கூடும் என்று பாளையங்கோட்டை இந்திய வைத்யக் கல்லூரிக்கு முன்னைவிட அதிக மாணவர்கள் விண்ணப்பம் செய்து இருப்பதாகத் தெரிய வருகிறது. இந்திய வைத்ய முன்னேற்றத்திற்கு இது ஓர் அளவு அறிகுறியாகும்.

தவிர 29-வது L. I. M. மகாநாட்டில் துவக்கத்தில் தலைமை தாங்கிய Dr. K. R. பாலசுந்திரம் அவர்கள் பேசியுள்ளதை சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவரும் என்று எண்ணுகிறோம். அவர் பேசியது இந்திய வைத்யர்களுக்கும் ஆங்கில வைத்யர் களுக்கும் சம்பளத்தில் பாகுபாடு இருக்கக்கூடாது. ஆங்கில வைத்யர்களுககு உள்ள அந்தஸ்து தேசீய வைத்யர்களுக்கும் தரப்படவேண்டும் என்பது மிகவும் முக்யமானது இமமாதிரி யான ஏற்பாடு இல்லாவிடில் இந்திய வைத்யத்திற்காக அர சாங்கம் எவ்வளவு செலவு செய்தாலும் இந்திய வைத்யர்களுக்கு படிக்க முன் வருவதிலோ உத்யோகத்திலோ தொழில் நடத்து வதிலோ உத்ஸாகம் ஏற்படாது கனம் மந்திரி அவர்கள் இக் கோரிக்கையை நிச்சயமாக கவனிக்கக்கூடும என்று நம்புகிறோம்.

தமிழ்நாட்டில் தற்பொழுது அரசாங்கக் கல்லூரிகளில் சித்த முறை ஒன்று தான் கற்பிககப்படுகிறது ஆயுர்வேத முறையும் யூனானி முறையும் கற்றுக்கொள்ள மாணவர்கள் சேராததே இதற்குக் காரணம். தமிழ்நாட்டுப் பள்ளிகளில் சம்ஸ்கிருதமும் அரபிமொழியும் கற்றுக்கொடுக்க வழி செய்தால் இக்குறை நீங்கி விடும் ஆருவது படிவத்திலிருந்தே இந்த மொழிகளைக் கற்றுக் கொள்ள விரும்புகிறவர்களுக்கு எல்லாப் பள்ளிகளிலும் வசதி அளிக்க வேண்டும்.

# மாவட்ட தலைநகரில் இந்திய மருத்துவ மனைகள்

## அரசு திட்டம் பற்றி அமைச்சர் தகவல்

இந்திய மருத்துவத்துறையில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில், ஆராய்ச்சி மேற்கொண்டு மக்கள் விரும்பி ஏற்கும் மாத்திரைகளையும், மருந்துகளையும் தயாரிக்க இந்திய மருத்துவ முறை டாக்டர்கள் முன்வரவேண்டும் என்று கல்வி, பொதுநலத் துறை அமைச்சர் திரு நெடுஞ்செழியன் கேட்டுக்கொண்டார்.

தமிழ்நாடு எல். ஐ. எம் சங்கத்தின் 29-வது மகாநாட்டில் இன்று அமைச்சர் பேசுகையில் இவ்விதம் கூறினர்.

தமிழ்நாட்டில் இந்திய மருத்துவமுறை வளர்ச்சிக்கு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை அமைச்சர் விளக்குகையில், ஒவ்வொரு மாவட்ட தலைநகரிலும் நாட்டு மருத்துவ மனைகள் நிறுவ அரசு எண்ணியுள்ளதாயும், ரு 1 லட்சத்துக்கு மேல் வருஷ வருமானம் உள்ள கோவில்களில் கோவில்களை யொட்டி கோவில் பணத்தில் சித்த மருத்துவ மனைகள் தொடங்க உத்தேசப் இருப்ப தாயும் கூறினர்.

துவக்கக் கூட்டத்திற்கு டாக்டர் கே. ஆர். பாலசுந்தரம் தலைமை வகித்தார்.

ஊராட்சி மருத்துவ மனைகளில் எல் ஐ எம். டாக்டர்களுக்கும், ஆங்கில வைத்தியமுறை டாக்டர்களுக்குமிடையே இருந்துவரும் சம்பள வித்தியாசத்தை நீக்கும்படி திரு. பாலசுந்தரம் அரசை கேட்டுக்கொண்டார்.

# ஸஹஸ்ரயோகம்

---

நேத்திரரோகங்களின் நிதானம்: அதிகக்கசப்பு, காரம், புளிப்பு இவையுள்ள ஆகாரங்களை உபயோகிப்பதால் தோஷங்கள் கோபத்தை அடைந்து பித்தத்தை ஆச்ரயித்து ஸ்ரோதஸ்ஸுக்கள் வழியாக மேல் நோக்கிச்சென்று கண்ணில் வியாபித்து அனேக வியாதிகளை உண்டுபண்ணுகின்றன.

குறிப்பு: வர்த்மரோகங்கள் மொத்தம் 23. அவை யாவன (1) கிருச்ரோன்மீலம் (2) அருக் (இதை நிமேஷம் என்று அஷ்டாங்க ஹிருதயம்) (3) வாதாஹதம் (4) கும்பிகா (5) பித்தோத்கிலிஷ்டம் (6) பக்ஷ்மசாதம் (7) போதகீ (8) கபோத்கிலிஷ்டம் (9) கிரந்தி (இது அஷ்டாங்கஹிருதயத்தில காணப் படவில்லை.) (10) அங்கனம் (இது லகணமென்று அஷ்டாங்க ஹிருதயத்தில் சொல்லப்பட்டிருக்கின்றது.) (11) உத்ஸங்கம் (12) நேத்ரார்சஸ் (13) அதிமாம்ஸம் (இது அஷ்டாங்கஹிருதயத்தில் சொல்லப்படவில்லை) (14) அஞ்ஜனநாமிகா (15) பிஸவர்த்மகம் (16) உத்க்லிஷ்டம் (17) ச்யாமவர்த்ம (18) க்லிஷ்டம் (அது உத்கிலிஷ்டவர்த்ம என அஷ்டாங்கஹிருதயத்தில் கூறப் படுகின்றது. (19) ஸிகதாவர்த்ம (20) கர்தமம் (21) பக்ஷ்மோபரோதகம் (22) அலஜி 23) அர்புதம். (ஆனால் அஷ்டாங்க ஹிருதயத்தில் சொல்லப்பட்ட க்லிஷ்டவர்த்மனீ, பஹலம் என்ற இருவியாதிகள் ஸஹஸ்ரயோகத்தில் விடப்பட்டிருக்கின்றன. வர்த்மரோகங்களில் சொல்லப்பட்ட குகூணகம் என்ற நோய் ஸஹஸ்ரயோகத்தில் ஸந்திரோகங்களில் சேர்த்துச் சொல்லப் பட்டிருக்கிறது.)

கிருச்ரோன்மீலம்: இமைகளில் இருக்கும் சிறிய ரக்தக் குழாய்களில் வாயுகோபம் அடைந்து இமைகளை அசைக்க முடியாமல் செய்யும். தூங்கி விழிக்கும்பொழுது கண்ணில் மணல் விழுந்ததுபோல் உறுத்தும். குத்துவலி உண்டாகும். எண்ணை விழுந்ததுபோல் கரிக்கும். மூடமுடியாமல் சிரமம் ஏற்படும். கையால் தடவினால் சுகம் ஏற்படும். நிமேஷம்: இமைகளில் வாயுசென்று அடிக்கடி கண்களைத் தானாக மூடவும் திறக்கவும் செய்யும். வலி இல்லாமலும் ஏற்படும். வாதாஹதம்: கண்ணின் இமையில் வாதகதி இல்லாமல்போவதால் கண் தானாகவே விழித்துக்கொண்டே இருக்கும். கடைக்கண் விரிந்து சுரணை

இல்லாமல் ஆகும். மூடமுடியாமல் போகும். கும்பிகா: பித்தத்தினுல் இமையில் கருப்பு நிறமான சிரங்குகள் உண்டாகும். அது மெதுவாகப் பழுத்து உடையும். பித்தோத்கிலிஷ்டம்: இமையில் வலி, சூடு, சிகப்பு, குத்து, இவை அதிகம் உண்டாகும். தொட்டால் வலிக்கும். பக்ஷ்மசாதம்: பித்தம் இமை ஓரங்களில் சேர்ந்து இமை மயிர்களை விழச்செய்யும். போதகீ: கபத்தினுல் வெள்ளை நிறமாகக் கடுகு பருமனுள்ள சிரங்குகள் ஏற்படும். கபோத்கிலிஷ்டம்: கண் கரிக்கும். வீங்கும், வலிக்கும். தினவு உண்டாகும் நீர் வெளிவரும். கிரந்தி: வெளுப்பாக வீங்கிதினவு உண்டாகும் கடுகடுப்புக் காணும். அங்கனம்: இலந்தைக்கொட்டை போன்ற புண்கள் காண்கில் அங்கனம் என்று சொல்லப்படும். உத்ஸங்கம்: ரக்தத்தினுல் சிவந்து நிறைய சிறுசிறு சிரங்குகள் உண்டாகும். நேத்ரார்சஸ்: கண்குதறி சதைகளைத் தொட முடியாமல் போகும். அதிமாம்ஸம்: இமைக்குள் மிருதுவாகவும் சூடாகவும் வலி கடுப்பு இவைகளுடனும் சதை வளரும். அஞ்சன நாமிகா: இமைகளில் ரக்தத்தினுல் சிகப்பான பல சிரங்குகள் காணும். கட்டியாக சிறுபயறளவு இருக்கும். தினவும் எரிச்சலும் ரக்தப்பெருக்கும் உண்டாகும் சஸ்திர சிகித்ஸையால் மிகவும் அதிகமாகும். இது அஞ்சனநாமிகா. பிஸவர்த்மகம்: திரிதோஷ கோபத்தால் தாமரை வளயம்போல் இமைக்குமேல் தடித்து நீர் ஒழுகும்.

உத்கிலிஷ்டம்: திரிதோஷ ரக்தகோபங்களால் கண் பொங்கிக்கொள்ளும். சரியாகவும் வரும். ச்யாமவர்த்ம: ரக்தத் திரிதோஷங்களால் கருத்து குதறி வலி வீக்கம் அதிகம் ஏற்படும். க்லிஷ்டம்: கண் இமை வீங்கிச்சிவந்து அரிப்பு அதிகமாய் இருக்கும். ஸிகதாவர்த்ம: இமைக்குள் மணல்போல் சிறு சிரங்குகள் ஏற்பட்டுத் தொந்திரவு செய்யும். கர்த்மவர்த்ம: கருத்து அதிக மாம்ஸம் தடிப்பாக ஏற்படும். பக்ஷ்மோபரோதகம்: இமைமேல் தடித்து வளைந்துசூக்ஷ்மமான இடங்களில் குத்துவலி வீக்கம் சொரசொரப்பு நீர்ததும்பி ஒழுகுதல் முதலியன உண்டாகும். வளைந்து மயிர்க்காலில் குத்துவலி இருக்கும். மயிரை எடுத்தால் வலி தீரும். பிறகு சிறிதுநேரம் கழித்து மறுபடியும் உண்டாகும். அலஜி: கண்கள் அதிகம வீங்கி சிகப்பு ஏற்பட்டால் அலஜீ என பெயர் அர்புதம்: உள் சதை கெட்டுப்போய் கோழியின் பூபோல சிவந்து வளர்ந்தால் அர்புதமெனப்பெயர். (இதில் ஸாத்யாஸாத்யங்கள் ஸஹஸ்ரயோகத்தில் சொல்லப்படவில்லை. கிருச்ரோன்மீலனம் மருந்துகளால் சாத்தியமென்றும் நிமேஷம், வாதாஹதம், அர்சஸ் ஆக இம்மூன்றும் அசாத்தியமென்றும், பக்ஷ்மோபரோதம் யாப்யமென்றும் மற்றவைகள்

சஸ்திர சாத்யமென்றும் அஷ்டாங்கஹிருதயத்தில் கூறப் பட்டுள்ளது.)

## ஸந்திரோகநிதானம்

சூகூணகம்: குழந்தைகளுக்குப் பல் முளைக்கும்போது கண் வீங்கிச் சிவந்து, பார்வை குறைந்துபோகும். இது குகூணகம். ஜலஸ்ராவம்: சந்துகளில் நரம்புகள் வழியாக வாயுசென்று ஜலவாஹி ஸ்ரோதஸ்ஸுக்களைச் சுருங்கச்செய்து வீக்கமும் வலியும் இல்லாமல் ஜலம் ஒழுக ஆரம்பிக்கும் கபஸ்ராவம்: கபத்தினுல் வெளுப்பு ஜலம் வரும். அது வழவழப்பாக இருக்கும். உபநாஹம்: கபத்தினுல் கடைக்கண் வீங்கி அடிபாகம் கட்டியாகி க்ஷாரம் காய்ச்சும்பொழுது உண்டாகும் கொப்புளம்போல் மிருது வாகவும் வெளுப்பாகவும் பளபளப்பாகவும் வழவழப்பாகவும் கொதகொதப்பாகவும் அரிப்புடனும் கூடி வலியும் பாகமும் ஏற் படாமல் இருக்கும். ரக்தஸ்ராவம்: ரக்தகோபத்தால் அதிகம் சிகப்பு அதிசம் சூடும் ஏற்படும். பர்வணீ: இமை சந்துக்குச் சமீபம் வெள்ளைச் சிரங்குகள் சிறு பயரளவு ஏற்பட்டுச் சூடும் சிகப்பும் ஏற்பட்டு அதிக வலியும் வெடிப்பும் உண்டாகி ரக்தம் விழும். பூயஸ்ராவம்: இதுவே பக்வமாய் சீவிழ ஆரம்பித்தால் மிகவும் கடினமான பூயஸ்ராவம். பூயாலஸம்: மிகவும் சிறிய தாகக் கடைக் கண்ணில் புண் ஏற்பட்டு வீங்கி எரிச்சல் ஏற்படும். அலஜி: மூக்கிற்குப் பக்கம் அடிக்கண்ணில் பூயாலஸம்போலம் ஏற்படும். கிருமிகிரந்தி: கடைக்கண் கோடியிலும் மூக்கிற்குப் பக்கத்திலும் அரிப்பு எரிச்சல் கொஞ்சம் கொஞ்சம் சீ வரும். ஸாத்யாஸாத்யங்கள்: உபநாஹம் கிருமிக்கிரந்தி, பூயாலஸம், பர்வணீ, இவை நான்கும் சஸ்திரசாத்யம். ஆஸ்ராவம் நான்கும் அலஜீ ஒன்றும் ஆக இவை ஐந்தும் அஸாத்யம். (குகூணகம் என்ற நோய் வர்த்மரோகத்தில் சேர்க்கப்படவேண்டும்).

## ஸிதரோக நிதானம்

சுக்லிகா:—பித்தத்தினுல் வெள்ளைவிழியில் சிறுசிறு புள்ளிகள் உண்டாகும். அவை கறுப்பாகவும், பச்சையாகவும், மஞ்சளாக வும் இருக்கும். அழுக்கடைந்த கண்ணுடிபோல இருக்கும். வலி யும் சூடும் இருக்கும். சிலவற்றில் இல்லாமலும் இருக்கும். ஜுரம், பேதி இவைகள் காணும். சுக்லார்ம கபத்தால் வெள்ளை நிறமாக வளர்ந்த அதிமாம்ஸம், பலாஸகிரதிதம்—ஒரே நிறமாக வீங்கி வலி இல்லாமல் பெரிதாக பல உண்டாகும். பிஷ்டகம்–

ஜலம்போல கருப்பாகக் கபகிரந்திகள் வெள்ளையில் உயரமாக உண்டாகி அரிசிப்பொடி போல இருக்கும். ஸிரோத்பாதம்—ரக்தத்தினால் வெள்ளை விழியில் சிகப்பாக நிறைந்து சூடும் கரித்தலும் குத்தும் உண்டாகி ஜலம் வடியும். ஸிராஹர்ஷம்—மேல் சொன்ன வியாதியே கவனிக்காமல் அதிகப்பட்டு ஜலம் ஒழுகிக் கண்காணமல் வரும். ஸிராஜாலம்—சிகப்பாகத் தடித்து நரம்புகள் அதிகம் காணப்படும் சோணிதார்ம—அதிகமாக சமமாக இல்லாமல் தாமரைப்பூபோல் அதிமாம்ஸார்மமே சோணிதார்ம. அர்ஜுனம்—மினுமினுப்பாகச்சில புள்ளிகள் அதிகம் வலி இல்லாமல் முயல்ரக்தம்போல் காணும். பிரஸ்தார்யர்மம்—மிருதுவாகவும், வலி இல்லாமலும், கருப்பாகவும் அதிகம் ஏற்பட்டு சிகப்பாக ஆகும். ஸ்நாவார்ம ரக்தத்துடன் தோஷங்கள் சேர்ந்து சிறு நரம்புகள்போல் ஏற்படும். அதிமாம்ஸார்மம்—சுக்லம், ரக்தம் இவைகளால் ச்யாமமான மாம்ஸம் அதிகம் உண்டாகி நரம்பு தடித்துச் சூடும் கரிப்பும் உண்டாகும். ஸிரார்ம—கருப்பு விழிக்குச் சமீபம் வெள்ளை விழிமேல் கடுகுபோல் சிரங்குகள் உண்டாகும். சாத்யா சாத்யங்கள்-சுக்லிகாஹர்ஷம் ஸிரோத்பாதம், பிஷ்டகம், பலாஸகிரதிதம் அர்ஜுனம் ஆக இவை ஆறும் மருந்தினால் ஸாத்யம். பாக்கி ஏழும மருந்து சஸ்திரம் இவைகளால் ஸாத்யம். அசாத்தியங்கள் ஆறும் புதிதாக இருந்தால் ஸாத்யமே. கரு விழிக்குப் பக்கத்தில் இருக்கும் மாம்ஸம் நாம்பு முதலியவற்றால் சூழப்பட்ட வியாதிகளில் சஸ்திர சிகித்ஸை செய்யக்கூடாது செய்தால் கண் போய்விடும்

## கருவிழிரோகங்கள்

க்ஷதசுக்ரம்—பித்தத்தினால் பாப்பாவிலும் கருப்பு விழியிலும் முதல் படலத்தைப் பேதித்துக்கொண்டு சுக்ரம் என்ற நோய் உண்டாகும் கண் சிகப்பாக இருக்கும். சூடும் வலியும் உண்டாகும். நாகப்பழம்போல் கருவிழி இருக்கும். கொஞ்சம் தாழ்ந்தும் காணப்படும் இது க்ஷதசுக்ரம். முதல் படலம் உடைந்து உண்டானால் ஸாத்யம் இரண்டாவது படலம் உடைந்து உண்டானால் யாப்யம். மூன்றாவது படலம் உடைந்து உண்டானால் அஸாத்யம் சுத்தசுக்ரம்—வலி குறைந்து வெள்ளை நிறமாகவும் கருவிழியில் உண்டாகும் அஜகா—சிகப்பாகவும் வலியுடனும் வழுவழுப்பான நீர் வெளிவந்து ஆட்டின் மலம்போலவும் கருவிழியில் உண்டாகும். ஸிராசுக்ரம்—திரிதோஷம் ரக்தம் இவை சேர்ந்து சிகப்பான நரம்புகள் கருவிழியில் நிறைய உண்டாகும். அதிகச் சூடும் அதிக வலியும் ஏற்படும் வெளிக்கிளம்பித் தெரியும்.

இந்த சுக்ரங்களில் அதிக வீக்கமும் சூடும் சிகப்பும், குத்துவலியும், புண்ணும் சேர்ந்து இருந்தால் அசாத்யமாகும். சங்கசுக்ரம் என்பது இவ்விடத்தில் சுத்தசுக்ரம் என்பதற்குப்பதிலாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

## திருஷ்டிரோகங்கள்

கருவிழியில் நடுவிலுள்ள பாப்பாவுக்கு திருஷ்டி எனப்பெயர். அதில் மொத்தம் 27 வகை வியாதிகள் உண்டாகின்றன. அவை யாவன. முதல் படலத்தில் (1) வாததிமிரம் (2) பித்ததிமிரம் (3) கபதிமிரம் (4) ரக்ததிமிரம். இரண்டாம் படலத்தில் (5) வாத திமிரம் (6) பித்ததிமிரம் (7) கபதிமிரம் (8) ரக்ததிமிரம் (9) வாத காசம் (10) பித்தகாசம் (11) கபகாசம் (12) ரக்தகாசம் (13) வாதலிங்கநாசம் (14) பித்தலிங்கநாசம் (15) கபலிங்கநாசம் (16) ரக்தலிங்கநாசம் (17) ஔபஸர்கிகலிங்கநாசம் (18) கம்பீரா (19) ஹ்ரஸ்வா (20) பித்தவிதக்தா (21) ஸம்ஸர்கம் (22) ஸந்நிபாதம் (23) நகுலாந்தம் (24) தோஷாந்தம் (25) விதக்தே ஷ்ணம் (26) விதக்தாம்லா (27) தூம்ரம். இவற்றுள் சில பேதங்கள் விடப்பட்டிருக்கின்றன.

அடுக்கடுக்காகக் கண்களில் இருக்கும் ஐந்து படலங்களில் ஸிரைகள் வழியாகத் திரிதோஷங்கள் சென்று திமிரம், காசம், ஆந்த்யம் என்ற இந்த வியாதிகளை உண்டாக்கி கண்ணின் பார்வையைக் கெடுக்கும்.

திமிரம்—தோஷங்கள் முதல் படலத்தில் சென்றால் பார்க்கும் வஸ்துக்கள் தெளிவாகத்தெரியாது. இது திமிரத்தின் ஆரம்பம். தோஷங்கள் இரண்டாவது படலம் சென்றால் இல்லாதவஸ்து தென்படும். மிகவும் நுட்பமாகப் பார்த்தால்தான் உள்ள வஸ்து தெரியும். பக்கத்தில் இருப்பது எட்டியும் எட்டி இருப்பது பக்கமாகவும் தோன்றும். தோஷங்கள் வட்டமாகச் சுற்றி இருந்தால் இவ்விதம் நேரும் பார்வைக்கு நடுவில் இருந்தால் ஒருவஸ்து இரண்டாகத் தெரியும். தோஷங்கள் பல இடங்களில் நின்றால் பலவிதமாகத் தெரியும், தோஷங்கள் கண்ணின் உள் வியாபித்தல் குட்டைவஸ்து நீண்டதாகவும் நீண்டவஸ்து குட்டையாகவும் தெரியும். கண்ணின் மேல் பாகத்தில் இருந்தால் தூரத்து வஸ்துக்கள் தெரியாது. கீழ்பாகத்தில் இருந்தால் பக்கத்து வஸ்துக்கள் தெரியாது. மேலும் கீழும் தங்கின தோஷங்கள் பாப்பாவின் பக்கமாக இருந்தால் தூரதிருஷ்டி சமீபதிருஷ்டி இரண்டும் இராது. இவைஇரண்டாவது படலத்தில்

ஏற்பட்ட திமிரலக்ஷணம். தோஷங்கள் மூன்ருவது படலத்தில் சென்ருல் அதற்கு காசம் எனப்பெயர். இது வந்தால் புடவை போட்டுக் கண்ணை மறைத்ததுபோல் ஆகும். பார்வை மேல்கீழ் தாறுமாருகத் தெரியும் கொஞ்சம் தெரியாமலும் இருக்கும். இந்தச்சமயம் வைத்யம் செய்யாமல்போனுல் தோஷம் நான்காவது படலத்தில் பிரவேசிக்கும். அப்பொழுது பார்வையை மறைக்கும் கண் தெரியாது. இதற்கு லிங்கநாசம் அல்லது ஆந்தியம் எனப்பெயர்.

வாததிமிரம்-நடுவில் புகைமறைத்ததுபோல் தெரியும். பிறகு மறையும். இவ்விதம் ஒருசமயம்போல் இருக்காது பாப்பாவில் பாதிமிரம் ஏற்பட்டால் சூரியரச்மி, கயிறு முதலியனபோலத் தென்படும். வாதகாசம்—பாப்பா நன்ருகச் சிவந்து மூக்கு தெரியாமல் முகம் காணும். சந்திரசூரியாதிகள் பெரிதாகத் தெரியும். வளைந்து நிமிர்ந்து தெரியும் இது வாதகாசம் இந்தக்காசம் முற்றும்பொழுது பார்வை குறையும். புகை புழுதி இவை மறைப்பதுபோல் இருக்கும் இவ்விதம் பார்வை குறைந்து ராத்திரி பகல் மாறுபட்டுத்தெரியாமல் ஆகும். இவ்விதம் வந்தால் வாதலிங்கநாசம் எனப்பெயர். இவ்விதம் வாதலிங்கநாசம் வந்து தோஷம் நேத்திர கோளத்தை ஆச்ரயித்து ஸிரைகளைச் சுருங்கச் செய்து பார்வை இல்லாமல் கண்கோளங்கள் போய் பள்ளம் விழுந்தால் கம்பீரா எனச் சொல்லப்படும். பித்ததிமிரம் உலகம் மயில்தோகைபோலும் புரு இரக்கைபோலும் மின்மினிபூச்சி போலும் பிறகு நீலமாகவும் தோன்றும். பித்தகாசம்- கருத்த வண்டுபோலும் இந்திரதனுஸ்ஸுபோலும் பரிவேஷம்போலும் தென்படும், கண்நிறமும் அவ்விதம் ஆகும். ஆந்த்யம்—கண் மணி நிறம் வண்டின் பின்பக்கம்போலும் கண் தெரியாமலும் ஆனுல் ஆந்தியம். பித்தகோஷத்தால் எல்லா வஸ்துக்களும் சிறிதாகத்தெரிந்தால் அதற்கு ஹ்ரஸ்வா எனப்பெயர். எல்லா வஸ்துவும் மஞ்சளாகத் தெரிந்தால் பித்த விதக்தை எனப்பெயர். சிலேஷ்ம திமிரம்—வெள்ளையாயும் மினுமினுப்பாகவும் சங்கு சந்திரன் மல்லிகைப்பூ, ஆம்பல்பூ இவை எல்லாம் எல்லா திக்கிலும் நிறைந்திருக்கிற மாதிரியும் தெரியும். சிலேஷ்மகாசம்—கண்ணில் பிரகாசம் குறைந்து சந்திரன் சூரியன் விளக்கு இவை நொறுங்கிப்போய் நிறையத் தெரியும். பார்வை வெளுத்து இருக்கும். சிலேஷ்ம வியாதிகள் கண்ணிற்குள் சேர்ந்தால் தாமரை இலை நீர்துளிபோல் ஆகும். சிலேஷ்மலிங்கநாசம்—தொடும்பொழுது இளகியும் உஷ்ணத்தால் சுருங்கியும் நிழலில் பரந்து காணும் சங்கு சந்திரன் ஸ்படிகம் முதலியனபோலும். ரக்ததிமிரம் - எல்லா வஸ்துக்களும் தாம்பிரநிறமாகும். கண்ணும்

தாம்பிர நிறமாகவுமிருக்கும். ரக்தகாசம் - எல்லா வஸ்துவும் கறுப்பாகவும் சிகப்பாகவும் காணும். கண்வெளி கறுத்தும் உள் சிவந்து பார்வை இல்லாமலும் ஆகும். இது தவிர துவந்த்வ ஸன்னிபாத தோஷங்களால் வருபவைகளை இந்த லக்ஷணங் களைக் கலந்து பார்த்துக் கொள்ளவும். இவை வந்தால் கண் சிவந்துபோம். கீரி கண்போல் ஆகும். பகலில் சுமாராகத் தெரியும். இரவு சுத்தமாகத் தெரியாது. இது நக்தாந்தியம் எனப்பெயர். சூரியாஸ்தமன சமயத்தில் திரிதோஷம் கண்ணிற் குள் சேர்ந்து கண் தெரியாமல் ஆகும். உதயத்தில் தோஷம் விலகிக்கொள்ளும். இது மாலைக்கண் எனப்பெயர்.

## ஸர்வாக்ஷி ரோகங்கள்

ஸர்வாக்ஷிரோகங்கள் என்பது கண்கள் முழுவதையும் வியா பித்துவரும் நோய்கள். இவைகள் 16 விதங்களாகப் பிரிக்கப் பட்டிருக்கின்றன. அவையாவன—(1) வாதாபிஷ்யந்தம் (2) பித் தாபிஷ்யந்தம் (3) கபாபிஷ்யந்தம் (4) ரக்தாபிஷ்யந்தம் (5) வாதாதிமந்தம் (6) பித்தாதிமந்தம் (7) கபாதிமந்தம் (8) ரக்தாதிமந்தம் (9) ஹதாதிமந்தம் (10) அந்யதோவாதம் (11) வாதவிபர்யயம் (12) சுஷ்காக்ஷிபாகம் (13) ஸசோபாக்ஷிபாகம் (14) அசோபாக்ஷிபாகம் (15) அக்ஷிபாகாத்யயம் (16) அம்லோ ஷிதம். (இவற்றுள் சில பேதங்கள் விடப்பட்டிருக்கின்றன.)

சரீரவேலை, வழி நடத்தல், வெய்யில், பசி, இவைகளால் சரீரம் காயும்பொழுது கண்ணுக்கு மங்கல் உண்டாவது வாதா பிஷ்யந்தம் எனப்படும். உபேக்ஷையால் இது விருத்தியடைந் தால் நெற்றி புருவம் கண் இமை தளர்ந்து காதுமுழக்கம், தலை சுற்றல், இவை கண்டால் ஹதாதிமந்தம் எனப்பெயர். இதை உபேக்ஷித்தால் கண்ணில்வலி, புண் ஆகுதல் தலைவலி, இவை களுடன் வளைந்து வீங்கி வலியுமுண்டாகும். கண் தெரியாமலும் ஆகும். இதற்கு வாதாதிமந்தம் எனப்பெயர். கண் சந்துகளிலும் கோணங்களிலும் வாயுசேர்ந்து வலிக்கும். கண் சிவந்து வளையும். இது வாதபர்யயம். சூடு, புகைச்சல் வீக்கம், இமை வீக்கம் இவைகளுடன் உள்பழுத்துக் குதறிக்கொள்ளும். நீர்வடியும். எல்லா வஸ்துக்களும் மஞ்சளாகத் தெரியும். அதிகம் எரிச்சல் உண்டாகும். இது பித்தாபிஷ்யந்தம். நெருப்பில் எரியும் தணல்போல் நாளடைவில் சிவந்துபோகும். இதற்குப் பித்தாதி மந்தம் எனப்பெயர். அரிப்பு, வீக்கம், சுருக்கம் இவையுடன் வெள்ளையாக வழவழப்பாக பூளையுண்டாகி சாப்பாடு, தூக்கம் இல்லாமல்போனால் இதற்குச் சிலேஷ்மாபிஷ்யந்தம் எனப்

பெயர். கறுத்து வீங்கி வெளுத்து வட்டமாக உண்டாகும். மூக்கு வீங்கும். வாயில் ஜலம் ஊறும், கண்ணில் பொடிவிழுந்த மாதிரி இருக்கும். இது சிலேஷ்மாதிமந்தம். கண் சிவந்து செம்பருத்திப் பூபோல் ஆகி பூளை நீர் அரிப்பு உண்டாகும். தொட்டால் வலி அதிகம் உண்டாகும். இது ரக்தாபிஷ்யந்தம். ரக்தம் சொட்டு சொட்டாக வரும். கறுத்து வெளித்தள்ளி தெரியும். இது ரக்தாதிமந்தம் . வாதபித்தத்தினுல் குத்துவலி ஏற்பட்டால் விக்ரேண்மை எனப்பெயர். கண் பயங்கரமாகவும் எண்ணைப்பசை இல்லாமலும் திறக்க மூடமுடியாமலும் பழுத்து வலியும் வரட்சியும் ஏற்பட்டால் சுஷ்காக்ஷி பாகம் எனப்பெயர். மூன்று தோஷங்கள் சேர்ந்தால் சிகப்பாகப்பழுத்த அத்திப்பழம்போல நிறம் இருக்கும். கறுத்து சிவந்து கட்டியாக வழவழப்பாக ஜலமும் பூளையும் வரும். இதற்கு ஸசோபம் எனப் பெயர். கபம் நிறைந்து அதிகம் சூடு ஏறி கலங்கி நொதநொதப்பு உண்டாகி அதிகம் வலி உண்டானுல் அக்ஷிபாகாத்யயம் எனப் பெயர். அன்னஸாரங்களைப் புளிக்கச் செய்து கண்ணில் கொண்டு சேர்த்து, வீக்கம், கரிப்பு, சூடு, சிகப்பு உண்டானுல் செங்கண் (அம்லோஷிதம்) எனப்பெயர்.

ஹதாதிமந்தம், அக்ஷிபாகாத்யயம் இவை அஸாத்யம் வாதாதிமந்தம ஐந்து நாளும், பித்தாதிமந்தம் ஒரு நாளும் ரக்தாதிமந்தம் மூன்று நாளும், சிலேஷ்மாதிமந்தம் ஏழு நாளும், ஆகிவிட்டால் வைத்யம் செய்தும் பலன் இராது.

வர்த்மாவில் இருப்பதாலும், ஸந்தியில் ஒன்பதும், வெள்ளை விழியில் பதின்மூன்றும் கருவிழியில் ஐந்தும், வாதம், பித்தம், கபம், ரக்தம் இவை காரணமாக பாப்பாவில், பதினைந்து திமிராதிகளும் நகுலதிருஷ்ட்யாதி ஆறும், இவ்விதம் பாப்பாவில் மொத்தம் இருபத்திஏழும், ஸர்வாக்ஷிரோகம் பதினுறும் எல்லாம் சேர்ந்து மொத்தம் தொண்ணூற்றிநாலும் இங்கு சொல்லப்பட்டிருக்கின்றன ஆனுல் இந்நோய் ஸம்ஸர்க ஸன்னிபாதங்களால் இன்னும் பல பிரிவுகளாகவும் ஆகும். அவைகளைப் புத்திமான்கள் ஊகித்து அறியவேண்டும்.

(இப்பொழுது சொல்லப்பட்ட பேதங்கள் அஷ்டாங்க ஹிருதயத்தை அனுசரித்தவைகள் சில பேதங்கள் ஸஹஸ்ர யோகத்தில் விடப்பட்டிருக்கின்றன. அவைகளை மற்ற நூல்களில் காணலாம். விக்ரேண்மை என்ற பேதம் வேறு நூலில் காணப்படவில்லை.)

## நேத்ரரோக சிகித்சை

961. திராக்ஷையைக் கஷாயம் வைத்து அதையே கல்கம் சேர்த்து நெய்வடித்து இதனால் கண்ணில் கட்டுதல், தாரை செய்தல், கண்ணில் போடுதல், நஸ்யம்செய்தல், முதலியவை களால் கிருச்சிரோன்மீலம் தீரும். கும்பிகை என்ற வியாதிக்கு தோகை இலையால் கண்ணை உரைத்து, இந்துப்பைப் பொடித்துப் போட்டு, பேய்ப்புடல், நெல்லிவற்றல், அதிமதுரம், இவை களின் கஷாயத்தால் தாரைசெய்யவும். இவைகளால் குணம் ஏற்படாவிடில் வியாதிஸ்தரை மலர்ந்து படுக்க வைத்து வென்னீரில் நனைத்த துணியால் நன்ருக இமைக்குள் துடைத்து, கண்ணுக்கு ஸ்வேதம்செய்து இமையைப்பிடித்துக் கொண்டு மண்டலாக்ரம் என்ற சஸ்திரத்தால் குறுக்காகக்கீறி உடன் ஷி சஸ்திரத்தால் அல்லது தோக இலையால் அல்லது இந்துப்பால் அல்லது கடல்நுரையால் தேய்த்து ரக்தத்தை நன்ருகத் துடைத்து எடுத்துமிருத்வீகாதி கஷாயத்தால் சுத்தம்செய்து, கண்ணில் மிருத்வீகாதி கிருதம் தடவி, தலையில் நல்லெண்ணை தேய்த்து பொரித்தூள் நெய் தேன் மூன்றும் கலந்து மூன்றுநாள் கட்டிவிட்டுப்பிறகு அவிழ்த்து திராக்ஷாதி கஷாயத்தால் கழுவி நஸ்யம் செய்து நாலுநாள் நெய்யைக் கண்ணில் போடவும், மறுபடியும் வீக்கம், அரிப்பு முதலியன இருந்தால் முன்போல் மறுபடியும் செய்யவும். வெள்ளை லோத்திர இலை, ஆமணக்குவேர் இவைகளை அரைத்து மண்பொதிந்து சுட்டு எடுத்து மண் சுத்தமாக இல்லாமல் அலம்பி காயவைத்துப் பொடிசெய்து முலைப்பாலில் கரைத்து கண்ணில்விடவும். உரைப்பது, கீறுவது, முதலியன குரு உபதேசப்படி அனுபவத்துடன் செய்யவேண்டும். பிடகைகள் உண்டானல் விரீஹிமுகம் என்ற சஸ்திரத்தால் கீறி, உள்கெடுதலை நீக்கி, மிருத்வீகாதிகஷாயத்தால் தாரைசெய்யவும். பித்தோத்கிலிஷ்டத்தை சரியானபடி மதுரஸ்கந்தத்தால் காய்ச்சின நெய்யைக்கண்ணில் நிறுத்திவைக்கவும். பக்ஷமசாதத் திற்கு ஊசிகாய்ச்சிவைக்கவும். அட்டையைவிடவும். பிறகு பால்துத்தத்தைத் துளசிரஸத்தில் அரைத்து பத்துநாள் தாம்ர பாத்திரத்தில் தேய்த்து உலர்த்தி எடுத்துத்தேனில் குழைத்துப் போடவும். போதகீ என்ற வியாதியைக்கீடு இந்துப்பு, சுக்கு, இவைகளைப் பொடிசெய்து போட்டு முருங்கை கஷாயத்தால் கழுவி முன்போல் செய்யவும். கபோத்கிலிஷ்டத்தை உரைத்து ரக்தம் போக்கியபிறகு தேனை வென்னீரில் கலந்து அதால் கழுவி பிறகு கபஹரங்களான நஸ்யம், வமனம், அஞ்சனம், முதலியன செய்யவும். அலஜியாலும் இவ்விதம் செய்யவும், இதனல் குணம் ஏற்படாவிட்டால் சூடுபோடவும். பக்ஷமோ

பரோதத்தைச் சிறிது கீறி, ஊசிநூலால் சேர்த்துத்தைத்துப் பிறகு ஆறினபிறகு நூலை எடுத்து, ந்யக்ரோதாதி கஷாயத்தால் தாரைசெய்து ந்யக்ரோதாதியால் நெய்வடித்துக் கண்ணில் போடவும். அதில் சரிவராவிட்டால் சஸ்திரம் காய்ச்சிச்சூடு போடவும். குகூணகத்திற்கும் இவ்விதம் செய்யவும் வமனம், விரேசனம், செய்து மருந்தும் கொடுக்கவும். கடுகு, அதிமதுரம், சுக்கு, இவை வமனத்திற்கும், கடுக்காய், திப்பிலி, திராக்ஷை, இக்கஷாயம் விரேசனத்திற்கும் உபயோகிக்கவும் குகூணகம் உள்ள குழந்தைக்குத் திப்பிலி, கோரைக்கிழங்கு, மஞ்சள், மரமஞ்சள், இவைகளை அரைத்து முலையில் தடவி அந்த முலைப்பாலைக் கொடுக்கவும் கண் வியாதிக்குத்தகுந்த தைலங்கள் தலைக்கு மஞ்சிஷ்டாதி திரிபலாதி, அஸனபில்வாதி சந்தனாதி' இந்தத் தைலங்கள் விசேஷம்.

962. திராக்ஷாதி - திராக்ஷை, அதிமதுரம், தேவதாரம், சந்தனம், கோரைக்கிழங்கு, விலாமிச்சவேர், தான்றிக்காய் நெல்லிவற்றல், கடுக்காய்த்தோல், கரும்புவேர், லோத்திரப் பட்டை, மரமஞ்சள் இவைகளை கஷாயம் வைத்து தாரை செய்யவும். அதிமதுரத்தைப் பாலில் கஷாயம் வைத்து தேன் ஜீனி கலந்து தாரைவிடவும்.

963. பச்சைக்கற்பூரம், இந்துப்பு, பழைய நெய், திப்பிலி. நெல்லிவற்றல், மிளகு, பீதரோஹணீ, இவை பழைய நெய்யில் அரைத்துத் தேனில் கலந்து கண்ணில்போட எல்லாவிதமான வர்தமரோகங்களும் தீரும்.

கஷாயம், நெய், நஸ்யம், தாரை முதலியவைகளுக்கு ந்யக்ரோதாதிகணம் - ஆல், அரசு, அத்தி. நீரடிமுத்து, லோத்திரப்பட்டை, நாவல்பட்டை, வட்டநாரைப்பட்டை, நீர்மருது. கலலால், ஸோமவல்கம், மதுரப்புளி வஞ்சி, (முரல்) பியாலம், புரசு, நந்தியாவட்டை, சிறு இலந்தை, கடம்பை. சிறுபனச்சி, அதிமதுரம், இலுப்பைவைரம், இவைகளுக்கு ந்யக்ரோதாதிகணம் எனப் பெயர். இதால் கஷாயாதிகள் செய்து உபயோகிக்கலாம்.

964 கரும்புவேர், அதிமதுரம், அஞ்சனம், மரமஞ்சள், லோத்திரப்பட்டை, காவிக்கல், இந்துப்பு, திரிபலை இவைகளைப் பாலில் அரைத்து கண்ணின்மேல் போடவும்.

965. திரிபலை, காவி, சந்தனம், செஞ்சந்தனம், மஞ்சள், மரமஞ்சள், பாச்சொற்றி, நன்னாரி, ஆலபமொக்கு, அருகம்பில், விலாமிச்சவேர், வேம்பு இலை, இவைகளைப் பாலில் அரைத்துப் போடவும்.

966 மரமஞ்சளைத் துளசி ரஸத்தில் அரைத்து நிழலில் உலர்த்திக் குளிகை செய்துபோட வர்த்மரோகங்கள் அனைத்தும் தீரும்.

# PURI BROTHERS (REGD.)

**Musk, Saffron and Indian Drugs Merchants**

## JULLUNDUR-1

Tele : " VENKATESH "  Phone : **3923**

**PRICE LIST FOR 1970**

| | | Rs. P. |
|---|---|---|
| Pure Musk | per gram | 35-00 |
| Pure Saffron | ,, | 1-75 |
| Pure Gorochanam | ,, | 9-00 |
| Pure Pearls special | ,, | 10-00 |
| Pure Pearls No, 2. | ,, | 8-00 |
| Pure Pearls No. 3. | ,, | 6-00 |
| Pure Amber No. 1 | per gm | 4-00 |
| Pure Amber No. 2 | ,, | 3-50 |
| Pure Amber No. 3 | ,, | 3-00 |
| Pure Amber Black | ,, | 1-00 |
| **PACHAKARPURAM** | | |
| Spl Bhimseni | per gram | 0-25 |
| Singapuri (Yellow) | ,, | 0-20 |
| German or Japan | | 0-20 |
| Ashtavargam | per Kilo | 14-00 |
| Jiwak Rishwak | ,, | 2-50 |
| Meda Mahameda | ,, | 8-00 |
| Kakoli Kashir Kakoli | ,, | 14-00 |
| Ridhi Vridhi | ,, | 12-00 |
| Suryatapi Silajit No. 1 | per Kilo | 100-00 |
| No. 2. | ,, | 85-00 |
| **BHASAMS** | | |
| Rajit Bhasam | per K. G | 1000-00 |
| Tamber Bhasam | ,, | 220-00 |
| Abhrak (100 times) | ,, | 230-00 |
| Abhrak (60 times) | ,, | 160-00 |
| Bang Bhasam | ,, | 160-00 |
| Akik Bhasam | ,, | 50-00 |
| Shilajit | ,, | 30-00 |
| Annabedi Bhasam | ,, | 30-00 |
| Swaran Makshika | ,, | 60-00 |
| Nag Bhasam | ,, | 120-00 |
| Pearl Bhasam | per ten gram | 100-00 |
| Parda Bhasam | ,, | 10-75 |

| | | Rs. P. |
|---|---|---|
| Hingul Bhasam | per ten gm. | 10-75 |
| Loh Bhasam (special) | per K. G. | 130-00 |
| Loh Bhasam No. 1 | ,, | 75-00 |
| Mandur Bhasam | ,, | 30-00 |
| Sankh Bhasam | ,, | 30-00 |
| Shring Bhasam | ,, | 30-00 |
| Vaikrant Bhasam | ,, | 180-00 |
| Hartal Godanti | ,, | 30-00 |
| Kant Loh Bhasam | ,, | 250-00 |
| Parwal Bhasam | ,, | 175-00 |
| **PILLS (GUTTIKA)** | | |
| Agnitundi Vati | per ten gm. | 1-00 |
| Basant Kushmakar | ,, | 50-00 |
| Chander Odya Ras | ,, | 40-00 |
| Sanjeevani Vati | ,, | 6-00 |
| Eladi Vati | per K. G. | 35-00 |
| Echha Bhedi Ras | ,, | 60-00 |
| Kaf Ketu Ras | , | 50-00 |
| Kan Kayan Vati | ,, | 45-00 |
| Khadi Radi Vati | ,, | 45-00 |
| Lavangadi Vati | ,, | 120-00 |
| Mritunjaya Ras | ,, | 125-00 |
| Mandur Vati | ,, | 40-00 |
| Sankh Vati | ,, | 50-00 |
| Shul Gaj Kesar Vati | ,, | 80-00 |
| Nityodit Ras | ,, | 125-00 |
| Chander Prabha Vati | | 60-00 |
| Maha Jograj Guggal | ,, | 110-00 |
| Jograj Guggal | ,, | 35-00 |
| Kishore Guggal | ,, | 33-00 |
| Kanchanar Guggal | ,, | 35-00 |
| Raj Parsadani Vati | 30 pills | 1-00 |
| Mridu Virechan | 1000 ,, | 16-00 |
| Leucorhin | 1000 ,, | 50-00 |
| Kasari Pills | 1000 ,, | 30-00 |

5% Commission will be allowed on all orders received direct by us

# இம்ப்காப்ஸ்

## பூரண இயந்திர சாதன வசதியோடு சுத்தமான ஆயுர்வேத, சித்த, யுனானி மருந்துகளை தயாரிக்கிறது

இந்திய மருத்துவ முறையின்படி வைத்தியம் செய்யும் மருத்துவர்கள் 1944-ம் ஆண்டிலேயே முதன்முதலாகக் கூட்டுறவுக் கொள்கையின் அடிப்படையில் ஒரு மருந்து சாலையை நிறுவினர். சுத்தமான மருந்துகளை தயாரித்து ஆயுர்வேத, சித்த, யுனானி மருத்துவ முறைக்குச் சேவை செய்வதுடன், நம் நாட்டு மருந்து மூலிகைகளை ஆராய்ந்து, புராதன மருத்துவ வல்லுநர்கள் பின்பற்றிய முறையை ஒரு நிலைப்படுத்துவதே இதன் நோக்கம். இதில் நாங்கள் நம்பிக்கையோடு முன்னேறினோம். இப்போது நவீன இயந்திர சாதன வசதிகளுடன் மருந்துகளை பக்குவமாகத் தயாரிப்பதில் பூரணத்துவம் பெற்று மக்களுக்குத் திறமையாக சேவை புரிகிறோம்.

இம்ப்காப்ஸ் தேசமக்களை ஆரோக்கியமாகவும் வலிவுள்ளவர்களாகவும் இருக்க துணை செய்கிறது.

IMPCOPS

தி இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாப்ரேடிவ் பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிட்.

லாட்டிஸ் பிரிட்ஜ் ரோடு, அடையாறு, சென்னை-20


பிரபலமான கெமிஸ்டுகள் மற்றும் டிரக்கிஸ்டுகளிடம் கிடைக்கும்

மற்ற அலுவலகங்கள்:

4/186, மௌண்ட்ரோடு, மதராஸ்-2 போன்: 86520

48, தெற்குமாசி வீதி, மதுரை P.O.

27, காசிவிஸ்வேஸ்வரன் கோயில் தெரு, சுல்தான்பேட்டை, பெங்களூர்-2 (மைசூர் ஸ்டேட்)



maa/IMP-/747/M-TA

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவத்திஞல்

கண்டுபிடிக்கப்பட்ட கை கண்ட பலனளிக்கும்

# "சக்தி சஞ்ஜீவி"

(REGD.)

குழந்தைகளுடைய ஈரல் குலேக்கட்டிகளே

எங்கிலேயிலும், போக்குவதிலும்,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர் :

## சக்தி விலாஸ வைத்தியசாலா

கரூர். (S. Ry.)


Edited by Vaidya Vachaspati Pandit P. S. Rama Sarma. Published by Dr. T. S. Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam, at 27, Chinnakadai Street, Tiruchirapalli-2. Printed at Githa Press, Tiruchirapalli-2.